




பத்திரிகை அறிக்கை
- உடனடி வெளியீட்டுக்கானது -
15 மார்ச் 2021

லண்டன்: மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகை அவர்களால் முன்னெடுக்கப்பட்ட உண்மை மற்றும் நீதிக்கான உணவுத்தவிர்ப்புப்போராட்டத்தின் வெற்றி இலக்கு எட்டப்பட்டு உத்தியோகபூர்வமாக உண்ணாநிலைப் போராட்டத்தினை நிறுத்தும் முடிவினை அறிவித்தல்.

இன்று உண்மை மற்றும் நீதிக்கான போராட்டத்தில் 17 நாட்கள் தொடர்ச்சியான உண்ணாநிலைக்குப் பின்னர் அம்பிகை அவர்கள் தனது நான்கு அம்சக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றை உள்ளடக்கிய ஐ.நா தீர்மானத்தை வெற்றிகரமாகப் பெற்ற பின்னர் தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்துப் பிரஜையும் இங்கிலாந்து அரசாங்கத்தின் முன்னாள் அரச ஊழியரும் அர்ப்பணிப்புள்ள மனித உரிமை செயற்பாட்டாளரும் மற்றும் இனப்படுகொலையை தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமான அம்பிகை அவர்கள் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தனது உண்மை மற்றும் நீதிக்கான உண்ணாநிலைப் போராட்டத்தினை லண்டனில் 27 ஆம் திகதி பெப்ரவரி மாதம் ஆரம்பித்தார். தமிழ் சமூகத்தின் தியாக தீபங்களான லெப் கேணல் திலீபன் மற்றும் அன்னை பூபதி ஆகியோரின் புனித வழியில் தொடர்ந்து அவர்களின் ஆசீர்வாதங்களுடன் தனது கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார்.
அகிம்சை வழியில் நடாத்தப்பட்ட உண்ணாநிலைப் போராட்டம் தமிழர்களின் வரலாற்றில் அதன் இலக்குகளை எட்டியது இதுவே முதல் முறையாகும்.

## பின்னணி

இலங்கை அரசு தமிழ் தேசியத்தின் மீது இனப்படுகொலையை மேற்கொண்டதுடன், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இன்று வரை தண்டனைகளின்றி தொடர்கிறது. நினைவுச்சின்னங்களை அழித்தல், சமத்துவத்தினை தடை செய்தல், மொழி மற்றும் வரலாற்றினை நீக்குதல் போன்றவற்றினூடாக தமிழ் இனவழிப்பு தடையின்றி தொடர்கிறது. தமிழர்களின் மனித உரிமை பறிக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட 12 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் தங்களிற்கான நீதிக்காகவும் அதற்கான பரிகாரங்களிற்காகவும் நாடி நிற்கின்றார்கள். இலங்கை அரசு தமிழ் தேசியத்தின் மீது இனப்படுகொலையை தொடர்வது மட்டுமல்லாமல் அதற்கு ஒருபடி மேலே சென்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1, 34/1 மற்றும் 40/1 ஆகியவற்றின் இணை அனுசரணையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகியதுடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் செயன்முறையிலிருந்தும் விலகியது. எனவே பாதிக்கப்பட்டவர்கள், தமக்கும் நண்பர்களிற்கும் அயலவர்களிற்கும் ஏற்பட்ட அட்டூழியங்களிற்கு நீதி கிடைக்க வேறு எந்த வழியும் இன்மையினால் பிரித்தானிய அரசினை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரைக்க கோர வேண்டிய நிலையில் இருந்தார்கள்.






2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையினை உருவாக்கும் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவருமாறு 250 க்கு மேற்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் பிரித்தானிய அரசினை கோரியிருந்தார்கள். அத்துடன் அதே மாதம் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூக பிரதிநிதிகள் ஒன்றிணைந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பது உட்பட ஒரு சர்வதேச பொறுப்புக்கூறல் செயல்முறைக்கு அழைப்பு விடுத்து கையெழுத்திட்டு அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தார்கள். 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இலங்கையின் வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிக்க இலங்கையை ICC யினை பரிந்துரைக்க வேண்டும் என்றும் வேறு பொருத்தமான மற்றும் பயனுள்ள சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை பரிந்துரைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

அதன்படி 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி இலங்கையின் வடக்கு கிழக்கிலுள்ள முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் மேற்படி கோரிக்கையினை முழுமையாக ஒப்புதல் அளித்து 500 இற்கு மேற்பட்ட புலம்பெயர் அமைப்புக்களினால் கையெழுத்திட்டு சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது கூட்டு கோரிக்கை ICC க்கு பரிந்துரைப்பதற்கான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியது.

அண்மையில் தமிழர் தாயகத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்களும் முஸ்லிம்களும் சர்வதேச சமூகம் இலங்கை மீது நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுத்து 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' என்ற எழுச்சி போராட்டம் இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் இதேபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்திவருகின்றனர். இவை எதுவும் பிரித்தானிய அரசாங்கத்தின் வெளிநாட்டு பொதுநலவாய அலுவலகத்தினால் (FCO) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை, பதிலளிக்கப்படவில்லை அல்லது ஒப்புக் கொள்ளப்படவில்லை என்பது மிகவும் முக்கியமானதாகும்.

முன்மொழியப்பட்ட ஐ.நா. தீர்மானத்தின் பூச்சிய வரைவு வெளியான பின்னர் பாதிக்கப்பட்ட தமிழர்களின் ஒருமித்த குரலுக்கு அதாவது இலங்கையிலிருந்தும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் ஒருமனதாக முன்வைக்கப்பட்ட அடிப்படைக் கோரிக்கைகளை உள்ளடக்கி ஐ.நா தீர்மானத்தில் மாற்றங்களை கொண்டுவருமாறு பிரித்தானியா அரசாங்கத்திற்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர் அம்பிகை அவர்கள் பலமுறை கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். அவருக்கு எந்த பதிலும் கிடைக்காததால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலையில் சாகும் வரையான உண்ணாநிலை போராட்டத்தை தொடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

## கோரிக்கைகள்

மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகை அவர்கள் தனது உண்ணாநிலைப் போராட்ட அறிக்கையில் பின்வரும் கோரிக்கைகளில் ஒன்றையேனும் நிறைவேற்றும் வரை தனது சாகும் வரையான உண்ணாநிலையை கைவிடப்போவதில்லையென தெரிவித்திருந்தார்.

1.இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை விசாரணை செய்வதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) மற்றும் வேறு பொருத்தமான மற்றும் பயனுள்ள சர்வதேச பொறுப்புக்கூறல் வழிமுறைகளை பரிசீலிக்கவும் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயங்களை எடுத்துக் கொள்ள ஐ.நா.பாதுகாப்புக் குழு மற்றும் ஐ.நா பொதுச் சபைக்கு பரிந்துரைத்தல்.

2. இலங்கையில் நிகழ்த்தப்பட்ட மிகக் கடுமையான சர்வதேச குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்களின் சான்றுகளை சேகரிப்பதற்கும் குற்றவியல் வழக்குகளுக்கு கோப்புகளைத் தயாரிப்பதற்கும் ஏதுவாக மியான்மருக்காக அல்லது சிரியாவிற்காக நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச, சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையை (IIIM) நிறுவுதல். ஒரு அர்த்தமுள்ள சர்வதேச சுயாதீன புலனாய்வு பொறிமுறையானது இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட தமிழர்களிடமிருந்து சான்றுகளை சேகரிக்க வேண்டியதுடன், செப்டம்பர் 2015 ஆம் ஆண்டு OISL இன் அறிக்கையில் உள்ள தகவல்களையும் ஆதாரங்களையும் பயன்படுத்த வேண்டும், அத்துடன் இவற்றிற்கு வரையறுக்கப்பட்ட கால அவகாசம் இருக்க வேண்டும்

3. இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தமிழினவழிப்பு நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கவும் மற்றும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் கள இருப்பினை நாட்டில் வைத்திருப்பதற்கு ஏதுவாகவும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் (OHCHR) விசேட பிரதிநிதியை நியமித்தல்

4. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையிலும் தமிழர்களுக்குரிய சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்மானிக்க ஐ.நா கண்காணிக்கும் வாக்கெடுப்பை பரிந்துரைத்தல்.

## வெற்றிகள்

பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் இனப்படுகொலைக்கு நீதி தேடும் தைரியமான மற்றும் உன்னதமான தேடலில், மனித உரிமைச் செயற்பாட்டாளர் அம்பிகை அவர்கள் கடந்த இரண்டு வாரங்களிற்கு மேலாக எந்த உணவையும் மருந்தையும் எடுக்க மறுத்து, தண்ணீரை மட்டுமே அருந்தி ஒரு கடுமையான அறவழிப் போராட்டத்தை மேற்கொண்டார்.

அவரது கோரிக்கைகள் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் எதிரொலிக்கப்பட்டு அவர்கள் அம்பிகை அவர்களின் பின்னால் பெரும் அலைகளாக அணிதிரண்டு ஆதரவு வழங்கினர். இளைஞர்கள் மற்றும் அனைத்து மட்டங்களிலுமுள்ள தமிழர்கள் அவருடைய கோரிக்கைகளை ஆதரித்ததுடன் மட்டுமல்லாமல் அவருடைய செய்திகளை சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களில் பகிர்ந்து கொண்டனர். தமிழர் தாயகம், மற்றும் தமிழகம், புலம்பெயர் நாடுகளெங்கும் அவரிற்கு ஆதரவாக பல பேரணிகள் மற்றும் உண்ணாவிரதங்கள் இடம்பெற்றன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை பல ஆண்டுகளாக தேடும் குடும்ப உறுப்பினர்கள் நீதி மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைத் வலியுறுத்தியும் தமிழ் தேசத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை

தொடர்ந்து வெளிப்படுத்தியும் வரும் அம்பிகை அவர்களின் துணிச்சலான தியாகத்திற்கு மரியாதை செலுத்தினர்.

அவர் தனது எதிர்ப்பை நடத்தியபோது, உலகெங்கிலுமுள்ள அரசியல்வாதிகள் ஆதரவு செய்திகளை / அறிக்கைகளை அனுப்பினர். பிரிட்டனின் முன்னணி எதிர்க்கட்சிகள் இரண்டும் முன்மொழியப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் இலங்கையில் பொறுப்புக்கூறலின் "சவாலை ஏற்கத் தவறிவிட்டது" என்பதை ஒப்புக் கொண்டு அது மேலும் "விரிவாக" மீண்டும் எழுதப்பட வேண்டும் என வலியுறுத்தின. மார்ச் 10, 2021 அன்று, Lord Ahamed of Wimbledon, ICPPG ஊடக ஒருங்கிணைப்பாளர் திருமதி கிறிஸ்ரி நிலானிக்கு எழுத்து பூர்வமாக பதிலளித்து பின்வரும் ஒப்புதலை அளித்தார்.

“ஒரு சர்வதேச சுயாதீன புலனாய்வு பொறிமுறையை நிறுவுவது தொடர்பாக, இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்களையும் ஆதாரங்களையும் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். எனவே எங்கள் வரைவுத் தீர்மானம் OHCHR ஐ இந்த தகவலைகளை ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்குமாறு கோருகிறது, எனவே இது எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் பயன்படுத்தப்படலாம். இது இலங்கை பற்றிய விரிவான OHCHR விசாரணையை (OISL) கட்டாயப்படுத்திய 2014 தீர்மானம் உட்பட முந்தைய தீர்மானங்களையும் உள்ளடக்கியதாக அமையும்”.

இதன் விளைவாக, ஒரு சக்திவாய்ந்த ஆக்கபூர்வமான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் புலம்பெயர்ந்தோரால் பிரித்தானியாவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன் தீர்மானம்; ஐ.சி.சி.க்கு பரிந்துரைக்கவோ அல்லது வாக்கெடுப்பை பரிந்துரைக்கவோ தவறிவிட்டாலும், அது உள்நாட்டு பொறிமுறைகளின் தோல்வியை ஒப்புக் கொண்டது (Op para 5) மற்றும் ஆதாரங்களை சேகரிக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்க ஒரு சுயாதீனமான பொறிமுறையை உருவாக்க முன்மொழிந்தது பொறுப்புக்கூறல் மற்றும் நீதித்துறையின் செயற்பாட்டிற்கு உதவுதல் (Op para 6) போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இப்பொறிமுறையில் குறைபாடுகள் இருந்தபோதிலும், இது உண்மையில் ஒரு தனித்துவமான சுயாதீனமான பொறிமுறையாகும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இது அம்பிகை அவர்களின் இரண்டாவது கோரிக்கையாகும்.

மேலதிகமாக, இத் தீர்மானத்தில் மேம்பட்ட கண்காணிப்பு முறையையும் (Op para 16) முன்மொழிந்துள்ளது, இது ஒரு நிரந்தர சிறப்பு அறிக்கையாளரின் நோக்கத்திற்கு உதவுகிறது, இது மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகையின் மூன்றாவது கோரிக்கையாகும். ஐ.நா தீர்மானத்தின் இறுதி வரைவுக்குள் அவரது கோரிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை வழங்கப்பட்ட நிலையில், அவரது போராட்டம் அதன் இலக்கை அடைவதில் வெற்றிபெற்றதுடன் மற்றும் தமிழ் சமூகத்திற்கு ஒரு புதிய சாதகமான முன்மாதிரியை அமைத்துள்ளது. இதன் வெற்றி, அகிம்சை போராட்டங்களின் மூலம் அவர்களின் இலக்குகளை அடைய முடியும் எனும் நம்பிக்கையையும் தருகிறது.

மேலும் விடுதலைக்கான போராட்டத்தை மேற்கொள்வதற்கும் தொடர்வதற்கும் உலகளவில் ஈழத் தமிழர்களின் புதிய தலைமுறையினை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற்றுள்ளார். மற்றும் தமிழ் அல்லாத பல இளைஞர்களை சமூக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை நம்பும்படி அவர் ஊக்கப்படுத்தியுள்ளார்.

அவரது தைரியமான எதிர்ப்பும், போராட்டத்தின் மீதான அவரது உறுதியற்ற அர்ப்பணிப்பும் எப்போதும் நினைவில் இருக்கும்.

தமிழ் சமூகத்தை ஒரு நேரிய பாதையில் கொண்டு செல்வதில் திருமதி. அம்பிகை செல்வகுமார் அவர்கள் காட்டிய உறுதிக்கும் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளில் சிலவற்றையாவது இங்கிலாந்து அரசாங்கம் ஐ.நா தீர்மானத்தில் உள்ளடக்க வழியமைத்தமைக்கும் நாங்கள் இந்த சந்தர்ப்பத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தப் போராட்டத்தினை முழுமையாக ஆதரித்து, அவர்களின் இடைவிடாத ஆதரவை வழங்கிய மற்றும் அதை ஒரு வரலாற்று வெற்றியாக மாற்ற பங்களித்த அனைத்து அமைப்புகளுக்கும் மக்களுக்கும் நன்றி கூறுகிறோம். இது உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஒற்றுமைக்கான ஒரு வெற்றியாகும், நாங்கள் எங்கள் உரிமைகளை வென்றெடுத்து சுதந்திரமான தாயகத்தை அடையும் வரை அகிம்சை முறையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளிற்கு உங்கள் தொடர்ச்சியான ஆதரவைக் கோருகிறோம்.

“போராட்ட வடிவங்கள் மாறாலாம்
போராட்ட இலட்சியம் மாறாது”

நன்றி.

ஆதரவு அணி
நீதிக்கும் உண்மைக்குமான உண்ணாநிலைப் போராட்டம்.